Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 | இதழ் Issue : 100 | செவ்வாய்க்கிழமை Tuesday | 10.02.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

## தூய்மைப் பணியாளர்களுக்கு முதல்வரின் உணவுத்திட்டம் விரிவாக்கம்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்



மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தூய்மைப் பணியாளர்களுக்கு முதல்வரின் உணவுத்திட்டம் விரிவாக்கத்தை திருவள்ளூர் அருகே போளிவாக்கத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

தூய்மைப் பணியாளர்களுக்கு முதல்வரின் உணவுத் திட்டத்தை முதல் கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சியில் கடந்த ஆண்டு நவம்பர் 15-ம் தேதி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். அதன் தொடர்ச்சியாக, மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தூய்மைப் பணியாளர்களுக்கான முதல்வரின் உணவுத்திட்டம் விரிவாக்கம் தொடக்க விழா மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று காலை திருவள்ளூர் அருகே போளிவாக்கத்தில் நடைபெற்றது. இதில், சிறப்பு விருந்தினராக முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று, ஆவடி மாநகராட்சி, திருவள்ளூர் நகராட்சி, திருமழிசை பேரூராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு விநியோகம் செய்யும் வாகனங்களின் செயல்பாட்டை கொடியசைத்து தொடங்கி வைத்தும், தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கியும்,மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தூய்மைப் பணியாளர்களுக்கு முதல்வரின் உணவுத் திட்டம் விரிவாக்கத்தை தொடங்கி வைத்தார். இந்த திட்டம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட 25 மாநகராட்சிகள், 145 நகராட்சிகள், 479 பேரூராட்சிகளில் பணிபுரியும் 1, 29,689 தூய்மை பணியாளர்கள் பயன்பெற உள்ளனர். இத்திட்டத்துக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.213.92 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தூய்மை பணியாளர்களுக்கு அரசு சார்பில் உணவு வழங்கும் திட்டம், இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதல் முறையாக செயல்படுத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின், தூய்மை பணியாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவி தொகை, பணியின் போது உயிரிழந்த தூய்மை பணியாளரின் குடும்ப த்துக்கு நிவாரண உதவி தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு. ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன, சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், தமிழக அரசின் தலைமை செயலாளர் முருகானந்தம், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் பிரதாப், அரக்கோணம் எம்பி ஜெகத்ரட்சகன், எம் எல்ஏக்கள் வி.ஜி. ராஜேந்திரன், கிருஷ்ணசாமி, சந்திரன், டி.ஜெ.கோவிந்தராஜன், சுதர்சனம், துரை.சந்திரசேகர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மக்களவை தொடர்ந்து ஐந்தாவது நாளாக முடங்கியது



மக்களவை தொடர்ந்து ஐந்தாவது நாளாக முடங்கி உள்ளது.

எப்ஸ்டீன் கோப்புகள், இந்திய ராணுவத்தின் முன்னாள் தளபதி எம். எம். நரவணேவின் நூல் என ஒரே நேரத்தில் இரு பெரும் பிரச்னைகள் நாட்டை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கின்றன. இன்னமும் இதுபற்றிப் பிரதமர் நரேந்திர மோடி கருத்து எதுவுமே தெரிவிக்கவில்லை.

எப்ஸ்டீன் கோப்புகள், அமெரிக்காவில் குழந்தைகளைக் கடத்தி பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய குற்றவாளியான ஜெஃப்ரி எப்ஸ்டீனுடன் தொடர்பில் இருந்த உலகத் தலைவர்கள் தொடர்பான ஆவணங்களில் பிரதமர் மோடியின் பெயர் ஒருபக்கம், இந்திய ராணுவத்தின் முன்னாள் தளபதி எம். எம். நரவணே எழுதிய புத்தகத்தில்,சீனராணுவ ஊடுருவலின்போது மத்திய அரசு முடிவெடுப்பதில் தாமதம் ஏற்படுத்தியதாக கூறப்படும் குற்றச்சாட்டு இன்னொரு பக்கம். இதற்கு நேரடியாக பதிலளிக்காமல் ஆளும் பாஜக அரசு திணறிக் கொண்டிருக்கிறது. எதிர்க்கட்சியினரோ, வெளிவராத எப்ஸ்டீன் கோப்புகளின் பக்கங்கள் இன்னும் அமெரிக்காவசம் இருக்கின்றன, அதன் காரணமாகவே இந்தியாவை விற்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு,அமெரிக்காவிடம் பிரதமர் மோடி சரணடைந்துவிட்டார் என்று விமர்சித்து வருகின்றனர். இதனிடையே, மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியைப் பேச அனுமதிக்காத விவகாரத்தை கையிலெடுத்த எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தை முடக்கி வைத்துள்ளனர். எப்ஸ்டீன் கோப்புகளும்மோடியும் குழந்தை களைக் கடத்தி பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய குற்றவாளியான அமெரிக்காவின் பெரும் பணக்காரர் ஜெஃப்ரி எப்ஸ்டீனுடன் தொடர்பில் இருந்தவர்கள், உரையாடியவர்கள், ஆலோசனைபெற்றவர்கள், அவருக்குச் சொந்தமான தனித் தீவுக்குச் சென்றவர்கள் தொடர்பாக 35 லட்சம் பக்கங்கள்,1.8லட்சம்புகைப்படங்கள், 2,000 விடியோக்கள் அடங்கிய "எப்ஸ்டீன் கோப்புகளை" அமெரிக்கநீதித்துறை வெளியிட்டுள்ளது. இந்த எப்ஸ்டீன் கோப்புகளில்அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், பில் கிளின்டன், பிரிட்டன் முன்னாள் இளவரசர் ஆண்ட்ரூவில் தொடங்கி இந்திய பிரதமர்நரேந்திரமோடி, மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் புரி, தொழிலதிபர் அனில் அம்பானி உள்ளிட்டோரின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. டிரம்ப், பில் கிளின்டன் போன்றவர்களின் பெயர்களில் இருக்கிறது என்பதில் மக்களுக்கு தெளிவு கிடைத்திருக்கும் சூழலில், பிரதமர் மோடி மீதான தகவல் புரியாத புதிராக இருக்கிறது.

ஜூலை 9, 2017 தேதியன்று ஜெஃப்ரி எப்ஸ்டீன் அனுப்பிய மின்னஞ்சல் ஒன்றில், "இந்திய பிரதமர் மோடி ஆலோசனை பெற்றார், இஸ்ரேலில் அமெரிக்க அதிபரின் நலனுக்காகத் தேவையான எல்லாவற்றையும் (டேன்ஸ்ட் அன்ட் சாங் – danced and sang)செய்தார்.அது நல்ல பலனளித்தது" என்று குறிப்பிட்டுள்ளார். இந்த மின்னஞ்சலை எப்ஸ்டீன் அனுப்பியதற்கு மூன்று நாள்களுக்கு முன்னதாக, அதாவது ஜூலை 4 – 6 வரை இஸ்ரேலுக்கு பிரதமர் நரேந்திர மோடி அரசு முறைப் பயணம் மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது., 2017 ஜூன் 25, 26 தேதிகளில் அமெரிக்க பயணம் மேற்கொண்ட மோடி, அங்கு அதிபர் டிரம்ப்பைச் சந்தித்திருந்தார்.

இதனிடையே, 2017 மார்ச் 16 அன்று எப்ஸ்டீனுக்கு தொழிலதிபர் அனில் அம்பானி அனுப்பிய செய்தியில், அதிபர் டிரம்ப்புடனான பிரதமர் மோடியின் சந்திப்புக்கு உதவுமாறு கேட்டுள்ளார். இந்த விவகாரத்தில்,பாலியல் குற்றவாளியிடன் மோடி என்ன ஆலோசனை பெற்றார்? டிரம்ப்பின் நலனுக்காக மோடி இஸ்ரேல்சென்றது ஏன்? டேன்ஸ்ட் அன்ட் சாங் என்றால் என்ன? மோடி – டிரம்ப் சந்திப்புக்கு பாலியல் குற்றவாளியிடம் அனில் அம்பானி உதவி கேட்டது ஏன்? என்ற அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பியுள்ளன.இதற்கு பதிலளிக்கும் வகையில் மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில், மோடியின் இஸ்ரேல் பயணத்தை தவிர மின்னஞ்சலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தும் புறக்கணிக்கக் கூடிய வதந்தி என்று குறிப்பிட்டு உள்ளது.

## புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை வளாகத்தில் மலிவு விலை உணவகம் திறப்பு



புதுச்சேரி: புதுச்சேரி அரசுடன் இணைந்து ஜிப்மர் மருத்துவமனை வளாகத்தில் மானிய விலையில் உணவகம் திறக்கப்பட்டது. இது, விரைவில் 24 மணி நேரமும் செயல்படவுள்ளது.

ஜிப்மர் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதுச்சேரி அரசு உணவகத்தை முதல்வர் ரங்கசாமி திறந்து வைத்து பயனாளர்களுக்கான சேவையை இன்று(பிப்.9) துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் புதுச்சேரி அரசின் சுற்றுலாத் துறை அமைச்சர் லட்சுமி நாராயணன், அரசு கொறடா ஏகேடி ஆறுமுகம், ஜிப்மர் இயக்குநர், டாக்டர் வீர் சிங் நேகி, புதுச்சேரி சுற்றுலா மேம்பாட்டுக் கழக (PTDC) இயக்குநர் முரளிதரன் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இது பற்றி ஜிப்மர் மற்றும் அரசு தரப்பில் கூறும்போது, "ஜிப்மர் வளாகத்தில் அமைந்துள்ள இந்த உணவகம், புதுச்சேரி சுற்றுலா மேம்பாட்டுக் கழகத்தின் (PTDC) ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்டுள்ளது. நோயாளிகள், அவர்களின் உறவினர்கள் மற்றும் ஜிப்மர் பணியாளர்களுக்கு குறைந்த விலையில், சுகாதாரமான மற்றும் தரமான உணவு வழங்கும் நோக்கில் இவ்வுணவகம் தொடங்கப்பட்டுள்ளது.

தற்போது இவ்வுணவகம் காலை 5.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை செயல்படும். விரைவில் 24 மணி நேர சேவையாக விரிவுபடுத்தப்படவுள்ளது.

மருத்துவமனைவளாகத்தில் இடையறாத உணவுச் சேவை உறுதி செய்யப்படும். மானிய விலையில் உணவு அனைத்தும் இருக்கும்.

இந்த முயற்சி, ஏழை மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நோயாளிகளுக்கு மிகுந்த பயன் அளிப்பதுடன், உயர்தர சுகாதார மற்றும் தரநிலைகளை பின்பற்றி, புதுச்சேரி சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் மூலம் நேரடியாக நிர்வகிக்கப்படுகிறது" என்று தெரிவித்தனர்.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
**தினத்தளம்**
DHINATH DHALAM
**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# தென்காசி மாவட்டம் செங்கோட்டையில் மனிதநேய மக்கள் கட்சி 18ஆம் ஆண்டு துவக்க விழா நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது

மனிதநேய மக்கள் கட்சி நகரக் கிளையின் சார்பாக,கட்சியின் 18ஆம் மனிதநேய மக்கள் கட்சி நகரக் கிளை தலைவர் செங்கை ஆரிப் தலைமை நகரச்செயலாளர்முகம்மது முஸ்தபா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.





ஆண்டுதுவக்கவிழாவை முன்னிட்டு தென்காசி மாவட்டம் செங்கோட்டையில் உள்ள நகரக் கிளை அலுவலகத்தில் கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

அதன்பின் செங்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக்கு பிரட், பிஸ்கட் மற்றும் பழங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சிக்கு தாங்கினார்.

மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர் கட்சியின் கொடியை ஏற்றி வைத்து துவங்கி வைத்தவர்கள் மாவட்ட செயலாளர் சலீம் ExMC அவர்கள் கட்சியின் கொள்கை மற்றும் சமூக நல்லினக்கம் தொடர்பாக சிறப்புரை நிகழ்த்தினார்கள்

மேலும் தமுமுக மாவட்ட துணைச் செயலாளர் முகப்பிலஷா, மனிதநேய மக்கள் கட்சி நகரச் செயலாளர் உமர் கத்தாப், வணிகர் அணி

மேலும் தமுமுக நகரச் செயலாளர் யாசர் அராபாத்,நகர துணைச் செயலாளர் ஹாஜி, மமக துணைச் செயலாளர் ஜாபர்,துணைத்தலைவர் மீரான் பெரியப்பிள்ளை வலசை, நகரத் தலைவர் கரிம், நாகூர் கனி, வடகரை கிளைத் தலைவர் மைதீன் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியின் மூலம்நூற்றுக்கும்மேற்பட்ட பொதுமக்கள் பயனடைந்தனர்.

# கோவை மக்கள் நல்லுறவு நலச்சங்கத்தின் 13ம் ஆண்டு துவக்கவிழாவை முன்னிட்டு பல்வேறு துறைகளில் சாதனை படைத்த சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கும் விழா நிகழ்ச்சி நடைபெற்றது



கோவை கணபதி, சங்கனூர்பகுதியில் கடந்த 12 ஆண்டுகளாக கோவை மக்கள் நல்லுறவு நலச்சங்கம் செயல்பட்டு வருகிறது. இந்த சங்கத்தின் 13ம்ஆண்டுதுவக்கவிழா நிகழ்ச்சி சங்க அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. தொடர்ந்து சமூகத்தில், பல்வேறு துறைகளில் இருந்து பல்வேறு சாதனைகள் படைக்கும் சாதனையாளர்களுக்கு சாதனையாளர்கள் விருதுகள் வழங்கபட்டது. விழாவிற்க்கு கோவை மக்கள் நல்லுறவு நலச்சங்கத்தின் தலைவரும், சமூக ஆர்வலருமான சுக்ருல்லா பாபு, தலைமை தாங்கினார்..

ஒவ்வொரு துறைகளிலும் சமூக பணிகளை முன்னெடுத்து, பொதுமக்களுக்குஉதவும்சமூக ஆர்வலர்களுக்கு அவர்களின் சேவைகளை பாராட்டி விருதுகள் வழங்கபட்டது. இந்த நிகழ்ச்சியில் கோவை மக்கள் நல்லுறவு நலச்சங்கத்தின் துணை தலைவர் விஜய் விநாய்க், துணைச்செயலாளர்

சதிஷ்குமார், ஒருங்கிணைப்பாளர் அப்துல் ரஹ்மான், மற்றும் சரவணன், மொகரூர் பாஷா,

ஜி.டி.ஜாபர்அலி, தாஜ்முகம்மது, அப்துல்லா, ஓமர்ஷெரீப், லோகேஷ், ஜெயன், சீனிவாசன், ஷாஜஹான், எம்.ஐ.

முஹம்மது அலி, ஹாஜியார்,மற்றும் அரசு பள்ளி ஆசிரியர்கள் மக்கள் நல்லுறவு நலச்சங்கத்தின் உறுப்பினர்கள், செயல்வீரர்கள், ஆட்டோ நண்பர்கள், மதிமுக ஷாஜகான்,மக்கள் முன்னேற்ற கழகம் அக்பர் ஷெரிப், தளபதி பாபு, நீயு கிரெசண்ட் பள்ளி ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.





தூத்துக்குடி மாநகராட்சியில் 16 இடங்களில் மொத்தம் 1700 தூய்மை பணியாளர்களுக்கு தினமும் காலை உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக ரூ.2 கோடியே 75 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை தமிழக சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் மற்றும் மேயர் ஜெகன் பெரியசாமி துவக்கி வைத்து தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கினர். இதைத்தொடர்ந்து தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் 34,36,42,43 மற்றும் 44வது வார்டுகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு மாநகராட்சி சிதம்பரநகர் பகுதி பேரங்காடி வளாகத்தில் காலை உணவு வழங்கும் திட்டத்தை மேற்கு மண்டல தலைவர் அன்னலட்சுமி மற்றும் பொதுக்குழு உறுப்பினர் கோட்டுராஜா துவக்கி வைத்து தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கினர். நிகழ்வில் 34வது வார்டு கவுன்சிலர் சந்திரபோஸ், 36வது வார்டு கவுன்சிலர் விஜயலட்சுமி, 42 ஆவது வார்டு கவுன்சிலர் அன்னலட்சுமி, 43 வது வார்டு முத்துமாரி, 44வது வார்டு கவுன்சிலர் ஜெயராணி வட்ட செயலாளர் துரை உட்பட கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# செங்கோட்டை நகராட்சியில் தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டம் துவக்கி வைப்பு

தென்காசி மாவட்டம் செங்கோட்டையில் நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் விழா செங்கோட்டை மேலூர் திருமண மண்டபத்தில் துவக்கி வைக்கப்பட்டது. தமிழகஅரசின் முத்தான திட்டமான நகராட்சி மாநகராட்சி பேரூராட்சி ஊராட்சி மன்றங்களில் பணி புரியும் தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டம் விரிவாக்கம் இன்று திருவள்ளூர் மாவட்டம் போளி வாக்கத்தில் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் தொடங்கி வைக்கப்பட்டதை அடுத்து செங்கோட்டை நகராட்சியில் பணிபுரியும் 100 தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது அவர்களுக்கான உணவுகளை பெறுவதற்கான இரண்டு அடுக்கு உணவு பாத்திரங்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்பட்டு இன்றைய முதல் நிகழ்வில் அனைத்து தூய்மை பணியாளர்களுக்கும் அருஞ்சுவை விருந்து வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சியை செங்கோட்டை நகர மன்ற தலைவி ராம லெக்ஷ்மி மற்றும் செங்கோட்டை முன்னாள் நகர் மன்ற தலைவர் தற்போதைய நகர்மன்ற உறுப்பினர் S.M. ரஹீம் ஆகியோர் துவக்கி வைத்தனர் இந்நிகழ்ச்சியில் நகராட்சி ஆணையர் செல்வராஜ் நகர்மன்ற உறுப்பினர்கள் பேபி ராஜப்பாத்திமா மேரிநியமனஉறுப்பினர் நவாஸ் பூட்டோ நகராட்சி கண்காணிப்பாளர் மற்றும் நகராட்சி ஊழியர்கள் ஹாரிஸ் உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர் தூய்மை பணியாளர்கள் சுமார் 100பேர் நகர்மன்ற தலைவர் ராம லெட்சுமி மற்றும்நகர்மன்றஉறுப்பினர்களோடு புகைப்படம் எடுத்துக் கொண்டது மிகுந்த வரவேற்பு பெற்றுள்ளது .

# பூலாங்குறிச்சி வ.செ.சிவ அரசு கலைக்கல்லூரியில் காலவரையற்ற பணி புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்ட கௌரவ விரிவுரையாளர்கள்



சிவகங்கை மாவட்டம் பூலாங்குறிச்சி வ.செ.சிவ அரசு கலைக் கல்லூரியில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 9ஆம் தேதி முதல் காலவரையற்ற பணிப் புறக்கணிப்பு போராட்டத்தில் கல்லூரி ஒருங்கிணைப்பாளர் மற்றும் பூலாங்குறிச்சி கிளைத் தலைவர் சி. செல்வராசு முன்னிலையில் கௌரவ விரிவுரையாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதில் யுஜிசி கௌரவ விரிவுரையாளர்களுக்கு 57,800 ரூபாய் வழங்கச் சொல்லி அறிவுறுத்தியுள்ளதை வழங்க வேண்டும். 12 மாதம் ஊதியம் என்பது முன்பு உறுப்பு கல்லூரி கௌரவ விரிவுரையாளர்களுக்கு வழங்கப்பட்டது. எனவே அவர்களுக்கு வழங்க சாத்தியமாகும் போது அதனை அனைத்து அரசு கல்லூரிக்கும் வழங்க வேண்டும், PF & EF உறுப்பு கல்லூரி கௌரவ விரிவுரையாளர்களுக்கு பிடிக்கப்பட்டது. அதனை அனைத்து அரசு கல்லூரி கௌரவ விரிவுரையாளர்களுக்கும் வழங்க வேண்டும், மகப்பேறு விடுப்பு வழங்க வேண்டும்.

மேலும் ஓய்வு பெற்ற கௌரவ விரிவுரையாளர்களுக்கு பணிக்கொடை 25 இலட்சம் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பணியினை புறக்கணித்து, கைகளில் பதாகைகளை ஏந்தி, கோஷமிட்டு காலவரையற்ற போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# ஈரோடு தீயணைப்பு நிலையத்தில் கல்லூரி மாணவர்கள் மற்றும் தனியார் செக்யூரிட்டிகளுக்கு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நேரடிப்பயிற்சி






ஈரோடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம்சார்பில்,கல்லூரிமாணவர்களுக்கான அடிப்படை தீயணைப்பு மற்றும் பேரிடர் மீட்புப் பயிற்சி முகாம் நடைபெற்றது. தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை இயக்குனரின் உத்தரவுப்படி, ஈரோடு மாவட்ட தீயணைப்பு அலுவலர் செந்தில்குமார் தலைமையில் இந்தப் பயிற்சி முகாம் நடைபெற்றது. இதில் ஈரோடு கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள் பெருமளவில்கலந்துகொண்டுபயிற்சிபெற்றனர். இப்பயிற்சியின் போது தீ விபத்துகளின் போது கையாள வேண்டிய பாதுகாப்பு முறைகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது. தீ உருவாவதற்கான காரணங்கள் மற்றும் அதன் வகைகள் குறித்தும், தீயணைப்பு கருவிகளைக் கொண்டு ஆரம்பக்கட்டத் தீயை எப்படிக் கட்டுப்படுத்தி, முழுமையாக அணைப்பது என்பது குறித்தும் நேரடி செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும், விபத்தில் சிக்கியவர்களைப் பாதுகாப்பாக மீட்கும் முறைகள் மற்றும் அடுக்குமாடி கட்டிடங்களில் தீ விபத்து ஏற்பட்டால் பொதுமக்களையும், பணியாளர்களையும் எவ்வாறு துரிதமாக மீட்பது போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதேபோல், ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து தீயணைப்பு நிலையங்களிலும் அந்தந்தப் பகுதிக்குட்பட்ட தனியார் பாதுகாப்பு காவலர்களுக்கும் தீயணைப்பு மற்றும் மீட்பு தொடர்பான அடிப்படை பயிற்சிகள் வழங்கப்பட்டன. இந்த விழிப்புணர்வு மற்றும் பயிற்சி முகாமின் மூலம் அவசர காலங்களில் பொதுமக்களின் உயிரையும் உடைமைகளையும் பாதுகாக்கும் திறன் மேம்படும் என மாவட்ட தீயணைப்புஅலுவலர்தெரிவித்தார்.இந்தபயிற்சி அளிப்பு நிகழ்வின்போது ஈரோடு மாவட்ட உதவி தீயணைப்பு அலுவலர்கள் கலைச்செல்வன் மற்றும் கணேசன் ஆகியோர் முன்னிலையில் செக்யூரிட்டிகளுக்கும் மாணவ மாணவிகளுக்கும் தீயை எவ்வாறு அணைக்க வேண்டும்என்றநேரடிப்பயிற்சிஅளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தனியார் செக்யூரிட்டிகளுக்கு பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் வழங்கப்பட்டன.



ஓமலூர் சிறப்பு நிலை பேரூராட்சியில், திமுக கிழக்கு ஒன்றிய செயலாளர் ஓ.எம்.ரமேஷ் 68 தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு திட்டத்தை துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் பேரூராட்சி தலைவர் செல்வராணி, துணைத்தலைவர் புஷ்பா, திமுக நகரச்செயலாளர் ரவிச்சந்திரன், தளபதி நற்பணி மன்ற தலைவர்கே. ஆர். மகேந்திரன், செயல் அலுவலர், சுகாதார ஆய்வாளர் மற்றும் கவுன்சிலர்கள் கலந்துகொண்டனர். தூய்மை பணியாளர்களுடன் அவர்களும் அமர்ந்து உணவருந்தினர்.

# ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நேற்று (09.02.2026) மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, விதவை உதவித்தொகை, கருணை அடிப்படையில் வேலை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், விலையில்லா தையல் இயந்திரம், ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 324 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று உரியதுறைஅலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

தொடர்ந்து, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் தலா ரூ.5,782/- மதிப்பீட்டில் 5 பயனாளிகளுக்கு ரூ.28,910/- விலையில்லா சலவைப்பெட்டிகளை வழங்கினார்.



இக்கூட்டத்தில், மாவட்ட சமூக நல அலுவலர் சண்முகவடிவு, ஒருங்கிணைந்தகுழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் பூங்கோதை உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி ரஸ்தா புனித அருளானந்தர் ஆலயத்தில் 06.02.26 வெள்ளிக்கிழமை கொடியேற்ற நிகழ்வு திருப்பலியும், 07.02.2026 சனிக்கிழமை திருவிழா திருப்பலியும், அருளானந்தர் உருவம் தாங்கிய தேர்பவனி யும் 08.02.26 ஞாயிற்றுக்கிழமை புது நன்மை திருவிழா திருப்பலியும் நடைபெற்றது. இவ்விழாவில் செஞ்சை பங்குதந்தை கிளமெண்ட்ராசா, ரஸ்தா ஆலய இயக்குனர் அருட்பணி அகஸ்டின், விழாவின் சிறப்பு அழைப்பாளர்கள் அருட்பணி அருள்ஜோசப் ( சிவகங்கை மறை மாவட்ட முதன்மை குரு ) அருட்பணி டெல்லஸ்( சிவகங்கை மறை மாவட்ட செயலாளர் ) அருட்பணி அந்தோணிசாமி ( புனித ஜோசப் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, ராம் நகர்). செக்காலை பங்குத்தந் மற்றும் பிற அருதந்தையர்கள், ஏனைய அருட் சகோதரிகள், மற்றும் ஏராளமான இறை மக்கள் கலந்து கொண்டு இறையாசீர் பெற்றுச் சென்றனர். விழாவினை ஆலய கமிட்டியாளர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

# அச்சிறுப்பாக்கம் மார்வார் அரசினர் பள்ளி முன்னாள் மாணவர்கள் சார்பில் ரூ.2 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் கண்காணிப்பு கேமரா



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் மார்வார்அரசினர்பள்ளி முன்னாள் மாணவர்கள் சார்பில் அரசு பள்ளியில் பயிலும் மாணவர்களின் பாதுகாப்பு நலன் கருதி 2 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் கண்காணிப்பு கேமரா பொருத்தி அசத்தினர். அச்சிறுப்பாக்கம் மார்வார் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் 2001 ம் ஆண்டு பயின்ற மாணவ மாணவியர் சார்பாக 2 லட்சத்து 25 ஆயிரம் செலவில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டது. இந்நிகழ்வின்போது பள்ளியின் தலைமை ஆசிரியர் விஜயகுமார், பள்ளியின் முன்னாள் மாணவர்களின் தூதுவர் தணிகைவேல், உதவி தலைமை ஆசிரியர் முனியாண்டி, 2001 ம் ஆண்டு முன்னாள் மாணவர்களின் ஒருங்கிணைப்பாளர்கள், முன்னாள் மாணவர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பெருந்திரளாக கலந்துகொண்டு விழாவை சிறப்பித்து மகிழ்ந்தனர்.

# சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பேருந்து நிலையத்தில் நடைபெற்று வரும் கட்டமைப்பு பணிகளை விரைந்து முடித்திட பேருந்து நிலைய வியாபாரிகள், பயணிகள் வலியுறுத்தல்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை புதிய பேருந்து நிலையத்தில் கடை வியாபாரிகளும், பேருந்து நிலையம் மக்கள் நடமாட்டமின்றி மேலும் நுழைவு வாயிலுக்கு தங்கள் சாதி தலைவரின் பெயரை



நடைபெற்று வரும் கட்டமைப்பு பணிகள் மற்றும் நுழைவு வாயில் கட்டுமான பணிகள் நிறைவடைந்த நிலையில், போதிய அளவு இறுதி கட்ட பணிகள் மேற்கொள்ளப்படாததால் பேருந்துகள் அனைத்தும் ராமேஸ்வரம்-மதுரை தேசிய நான்கு வழி நெடுஞ்சாலையில் பயணிகளை ஏற்றி இருக்கும் சூழ்நிலை நீடித்து வருகிறது.

இதன் காரணமாக பேருந்துகள் பேருந்து நிலையத்திற்குள் சென்று வெளியேறாததால்,பேருந்து பயணிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். குறிப்பாக பேருந்து நிலையத்தில் செயல்பட்டு வரும் அனைத்து வெறிச்சோடி காணப்படுவதால், வியாபாரமின்றி பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி வருகின்றனர்.

இதுகுறித்து நகராட்சி நிர்வாகத்திடம் வாடகை குறைக்க வேண்டும் என்ற வியாபாரிகளின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. எனவே விபத்துகளை தவிர்க்கவும், பேருந்து பயணிகளின் சிரமத்தை போக்கிடவும், பேருந்து நிலையத்திற்குள் உள்ள கடை வியாபாரிகளின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும் துரித நடவடிக்கைகளை நகராட்சி நிர்வாகம் மேற்கொள்ள பேருந்து பயணிகள் மற்றும் பேருந்தின் நிலைய கடை வியாபாரிகள் வலியுறுத்தினர்.

மேலும் நுழைவு வாயிலுக்கு தங்கள் சாதி தலைவரின் பெயரை தான் வைக்க வேண்டும் என ஒரு சாராரும், தங்கள் இனத் தலைவரின் பெயரை தான் வைக்க வேண்டும் என மற்றொரு சாராரும், தங்கள் கட்சித் தலைவர்களின் பெயரை தான் வைக்க வேண்டும் என மற்றும் ஒரு சாராரும் வலியுறுத்தி வரும் நிலையில், இவ்விவகாரத்தில் நகராட்சி நிர்வாகம் எந்தவிதமான முடிவு எடுக்கப் போகிறது என்ற எதிர்பார்ப்பும் பொது மக்களிடையே வலுத்துள்ளது. இறுதியாக எட்டப்படும் முடிவிற்கு எதிராக சிலர் போராட்டங்களையும் முன்னெடுக்க உள்ளதாகவும் பொதுமக்கள் சிலர் தங்களின் அச்சத்தை தெரிவித்தனர்.

## மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் காலை உணவு வழங்கும் திட்டத்தின் கீழ்

# 4,582 தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் உணவினை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கி இத்திட்டத்தினை நடைமுறைக்கு கொண்டு வந்தார்





ஈரோடு மாவட்டம், பெருந்துறை, பரிமளம் மஹாலில் நேற்று (09.02.2026) வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் காலை உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் 4,582 தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் உணவினை வழங்கி இத்திட்டத்தினை நடைமுறைக்கு கொண்டு வந்தார்.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று (09.02.2026) தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டம் திருவள்ளூர் மாவட்டம், போளிவாக்கத்தில் தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து. இந்த திட்டத்தின் கீழ் ஈரோடு மாநகராட்சியில் 4 மண்டலங்களிலும் உள்ள 2,165 பணியாளர்களுக்கு தூய்மை பணியாளர்கள், ஓட்டுனர்கள் மற்றும் கொசு ஒழிப்பு பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கான ஆண்டு செலவினம் ரூ.3,47,47,702/- ஆகும். இந்த திட்டத்தில் மூலம் காலை உணவு 47 இடங்களில் 2,038 பணியாளர்களுக்கு வழங்கப்பட உள்ளது. மேலும், மதிய உணவு 9 இடங்களில் 127 பணியாளர்களுக்கு வழங்கப்பட உள்ளது. மேலும், ஈரோடு மாவட்டத்தில் உள்ள 5 நகராட்சிகளில் உள்ள 874 தூய்மைப்பணியாளர்களுக்கும், தூய்மைப்பணியாளர்களுக்கும் 41 பேரூராட்சிகளை சேர்ந்த 1,543 காலை உணவு வழங்கப்படவுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் மாநகராட்சி, நகராட்சி, மற்றும் பேரூராட்சிகளில் மொத்தம் 4,582 துாய்மை பணியாளர்களுக்கு காலை மற்றும் மதிய உணவு வழங்கப்படவுள்ளது.

காலை மற்றும் மதிய நேரங்களில் பணிபுரியும் துாய்மைப்பணியாளர்களுக்கு உணவு பட்டியலில் உள்ள படி வழங்கப்படவுள்ளது. திங்கள் கிழமை இட்லி காலை உணவாக இட்லி (6×50g), மெதுவடை (50g) & சாம்பார் (250g, மதிய உணவாக சாம்பார் சாதம் (650g) மற்றும் பொரியல் (100g) வழங்கப்படவுள்ளது. செவ்வாய் காலை உணவாக ரவா கிச்சடி (500g) மற்றும் ரெட் சட்னி (100g) மதிய உணவாக எலுமிச்சைசாதம் (500g) மற்றும் உருளைக்கிழங்கு / சேனைக்கிழங்கு / வாழைக்காய் வறுவல் (100g), புதன் கிழமை காலை உணவாக வெண் பொங்கல் (500g) மற்றும் சாம்பார் (250g) மதிய உணவாக வெஜ் பிரியாணி (500g), வெங்காய பச்சடி (75g), வியாழன் ரவா உப்புமா (500g) மற்றும் புதினா /கொத்தமல்லி சட்னி (100g), மதிய உணவாகதக்காளிசாதம் (500g) மற்றும் உருளைக்கிழங்கு / சேனைக்கிழங்கு/ வாழைக்காய் வறுவல் (100g), வெள்ளிக்கிழமை காலை உணவாக இட்லி (6×50g), மெதுவடை (50g) மற்றும் சாம்பார் (250g) ,மதிய உணவாககொத்தமல்லி/ புதினா சாதம் (500g) மற்றும் உருளைக்கிழங்கு / சேனைக்கிழங்கு / வாழைக்காய் வறுவல் (100g), சனிக்கிழமை காலை உணவாக ரவா பொங்கல் (500g) மற்றும் சாம்பார் (250g), மதிய உணவாக புளி சாதம் (500g) மற்றும் உருளைக்கிழங்கு / சேனைக்கிழங்கு / வாழைக்காய் வறுவல் (100g), ஞாயிறு கிழமை காலை உணவாக சேமியா கிச்சடி (500g) மற்றும் சாம்பார் (250g) மதிய உணவாக வெஜ் பிரியாணி (500g), வெங்காய பச்சடி (75g) ஆகிய உணவு வகைகள் ஒவ்வொருகிழமைகளில் காலை மற்றும் மதிய உணவு வகைகள் வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்ச்சிகளின்போது, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணைமேயர் வே.செல்வராஜ். மாநகராட்சி துணை ஆணையாளர் கு.தனலட்சுமி, உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி.காஞ்சன் சௌதரி, மண்டல தலைவர் (3-ம்) சசிகுமார், தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல உறுப்பினர் ஆர்.பி.மோகன், மாநகர நல அலுவலர் மரு.கார்த்திகேயன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# தூத்துக்குடி மாப்பிள்ளையூரணி ஊராட்சியில் வளர்ச்சி பணிகள் எம்.சண்முகையா எம்.எல்.ஏ. நான்கு இடங்களில் திறந்து வைத்தார்



தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் மாப்பிள்ளையூரணி ஊராட்சியில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி, அங்கன்வாடி மையம், பொது விநியோக கட்டிடம் போன்ற வளர்ச்சிப்பணி திட்டங்களை ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

ராஜபாளையத்தில் ரூ. 19.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 60 ஆயிரம் லிட்டம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டி, சமீர்வியாஸ் நகரில் ரூ.19.50 லட்சம் மதிப்பீட்டில் 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி, கிழக்கு காமராஜர் நகர் மற்றும் மருத்துவ நகரில் ரூ.19.50 லட்சம் மதிப்பில் 60 ஆயிரம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி, வண்ணார்பேட்டையில் ரூ.14 லட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையம், வடக்கு கோட்டையன் தோப்பில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட ரேஷன் கடை ஆகியவற்றை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் யூனியன் ஆணையாளர்ஹகோர்ட் ராஜா, வட்டார வளர்ச்சி அலுவலர் சின்னத்துரை, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சின்னத்துரை, ஊராட்சி செயலர் ஜெயரத்தினம், ஒன்றிய துணை செயலாளர் கணேசன், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் அந்தோணி தனுஷ் பாலன், மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் பொன்பாண்டி ரவி, மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் பிளோ மின் ராஜ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் நெல்சன், ஒன்றிய சுற்றுசூழல் அமைப்பாளர் ராஜேந்திரன், மகளிரணி ஆரோக்கியமேரி ஜெசிந்தா, விடுதலை சிறுத்தை கட்சி வழக்கறிஞர் அர்ஜுன், எம்.எல்.ஏ. உதவியாளர் பாபு கழகதொண்டர்கள், மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்டத்தில் வாக்காளர்பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான முதற்கட்ட பணிகள்




இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைப்படி, 01.01.2026-ஆம் தேதியைத் தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு, ஈரோடு மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம், 2026 (Special Intensive Revision SIR, 2026) தொடர்பான முதற்கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரைவு வாக்காளர் பட்டியலானது அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவரால் 19.12.2025 அன்று வெளியிடப்பட்டது. தற்போது, மேற்படி வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறாத தகுதியான நபர்களை சேர்க்கும் பணிகள், புதிய வாக்காளர்களை சேர்க்கும் பணிகள், 2025 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலில் உள்ள தரவுகள் முந்தைய சிறப்பு தீவிர திருத்தம் 2002 வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவுகளுடன் ஒத்துபோகாத இனங்கள் மீதான பரிசீலனை மற்றும் பதிவுகளில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ளும் பணிகள் தொடர்பான படிவங்கள் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி பணிகளை மேற்பார்வை செய்யும் பொருட்டு, ஈரோடு மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு பார்வையாளர் மகாபீர் பிரசாத், சிறப்பு ஆய்வு பயணமாக நேற்று (09.02.2026) ஈரோடு மாவட்டத்திற்கு வருகை புரிந்தார் .Special Intensive Revision 2026 தொடர்பான பணிகளின் முன்னேற்றநிலை, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம், திருத்தம் ஆகியவை, Form-6, Form-7, Form-8 மனுக்களின் பரிசீலனை, வாக்காளர் பட்டியல் துல்லியமாகவும் பிழையற்றதாகவும் தயாரித்தல், வாக்காளர்பட்டியலில் உள்ள வாக்காளர்களின் தரவு முரண்பாடுகளைச் சரிசெய்வது மற்றும் வாக்குச்சாவடி மறுசீரமைத்தல் ஆகிய அம்சங்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்தார்.

# டெல்லியில் 10 பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்



டெல்லி முழுவதும் உள்ள 10 பள்ளிகளுக்கு காலை 8:30 மணி முதல் 9:00 மணிக்குள் வெடிகுண்டு மிரட்டல் அழைப்புகள் வந்துள்ளன. இந்த மிரட்டல்களைத் தொடர்ந்து, பாதுகாப்பு சோதனைகளை நடத்த சம்பந்தப்பட்ட பள்ளி வளாகங்களுக்கு காவல்துறை, தீயணை ப்புக் குழுக்கள் மற்றும் வெடிகுண்டு அகற்றும் குழுக்கள் விரைந்தன.

மிரட்டல்கள் பெறப்பட்ட பள்ளிகளில் விரிவான தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அதிகாரிகள் பள்ளி வளாகங்களை காலி செய்ய உத்தரவிட்டனர். " மொத்தம் 10 பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. தீயணைப்பு சேவை குழுக்கள் உடனடியாக வளாகங்களுக்குச் சென்றன. சோதனை நடைபெற்று வருகிறது," என்று டெல்லி தீயணைப்புத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

லொரெட்டோ கான்வென்ட் பள்ளி (டெல்லி கண்டோன்மென்ட்), கேம்பிரிட்ஜ் பள்ளி (சீனிவாசபுரி), வெங்கடேஷ்வர் பள்ளி(ரோகிணி),கேம்பிரிட்ஜ் பள்ளி (என்எ:ப்சி) மற்றும் பால் பாரதி பள்ளி (ரோகிணி) உள்ளிட்ட பள்ளிகளுக்கு இந்த மிரட்டல் மின்னஞ்சல்கள் வந்துள்ளன.

## தூத்துக்குடியில் தூய்மைப்பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை அமைச்சர் கீதா ஜீவன் மற்றும் மேயர் ஜெகன் பெரியசாமி தொடங்கி வைத்தனர்





தமிழகம் முழுவதும் உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு காலை உணவு வழங்கும் விரிவாக்கத் திட்டத்தை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, தூத்துக்குடி மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தின் தொடக்க விழா, அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தில் இன்று நடைபெற்றது.

இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் இளம் பகவத் தலைமை தாங்கினார். மாநகராட்சி ஆணையர் பிரியங்கா முன்னிலை வகித்தார். சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதா ஜீவன் மற்றும் மாநகராட்சி மேயர் என்.பி. ஜெகன் பெரியசாமி ஆகியோர் கலந்துகொண்டு, தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவை வழங்கி இத்திட்டத்தை தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினர்.

பின்னர்செய்தியாளர்களிடம் பேசிய மேயர் ஜெகன் பெரியசாமி தெரிவித்ததாவது: தமிழக முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, தூத்துக்குடி மாநகராட்சியின் 14 மண்டலங்களில் பணிபுரியும் 1,702 தூய்மைப் பணியாளர்களுக்கு இன்று முதல் காலை உணவு வழங்கப்படுகிறது. இது தவிர, ஷிப்ட் அடிப்படையில் பணியாற்றும்42பேருக்கு மதிய உணவும், 48 பேருக்கு இரவு உணவும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக தூத்துக்குடி மாநகராட்சி பொது நிதியிலிருந்து ஆண்டுக்கு ரூபாய் 2 கோடியே 75 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி பொறியாளர் தமிழ்ச்செல்வன், நகர் நல அலுவலர் சரோஜா, சுகாதார அலுவலர் ராஜபாண்டி, மாநகராட்சி துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ், கவுன்சிலர்கள் சுரேஷ்குமார், மும்தாஜ், தனலட்சுமி, மரிய கீதா, ராமு அம்மாள், ஆணையரின் நேர்முக உதவியாளர் துரைமணி, மேயரின் நேர்முக உதவியாளர் பிரபாகரன், பெருமாள் கோவில் அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார் மற்றும் ஏராளமான தூய்மைப் பணியாளர்கள், மாநகராட்சி பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி கொத்தடிமை தொழிலாளர்முறை ஒழிப்பு தினத்தினை முன்னிட்டு மாபெரும் கையெழுத்து இயக்கத்தினை கையொப்பமிட்டு துவக்கி வைத்தார்

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் நேற்று (09.02.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு தினத்தினை முன்னிட்டு மாபெரும் கையெழுத்து இயக்கத்தினை கையொப்பமிட்டு துவக்கி வைத்தார்.





முன்னதாக மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட வருவாய் அலுவலர் சு. சாந்தகுமார் தலைமையில் கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழியான,

"இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி மனிதனை வணிகப்பொருளாக்குதலும், வலுக்கட்டாயமாக வேலை சுமத்தும் வழக்கங்களும், கடன் பிணையத் தொகை வழங்கி கட்டாயப் பணிக்கு வற்புறுத்துவதும் தண்டனைக்குரிய குற்றமாக வரையறை செய்யப்பட்டுள்ளதால், கொத்தடிமைத் தொழிலாளர் முறையை முற்றிலும் ஒழித்திடும் நோக்கத்தை கருத்திற் கொண்டு, சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவேன் என்றும், கொத்தடிமைத் தொழிலாளர் முறை எந்தத் தொழிலில் இருந்தாலும் அதனை அடையாளங்கண்டு தக்க நடவடிக்கைஎடுக்கமுழு முயற்சி செய்வேன் என்றும். எந்தத் தொழிற்சாலையிலும் தொழிலாளர்களுக்கு முன்பணம் கொடுத்து பணியமர்த்துவதைத் தவிர்க்க வலியுறுத்துவேன் என்றும், கொத்தடிமைத் தொழிலாளர்களை மீட்டு அவர்களின் முழுமையான மறுவாழ்விற்காகப் பணியாற்றுவேன் என்றும், இந்திய அரசமைப்புச் சட்டம் வகைசெய்துள்ள அடிப்படை உரிமைகளை அனைவருக்கும் உரித்தாக்குவதற்கு, கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்புச் சட்டத்தைச் சீரிய முறையில் செயற்படுத்த உறுதுணையாகஇருந்துகொத்தடிமைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்குவதற்கு சிறப்புடன் செயற்படுவேன் என்றும் நான் உளமார உறுதி கூறுகிறேன்" என்று மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் உறுதிமொழியினை வாசிக்க அனைத்துறை அரசு அலுவலர்கள் மற்றும் பணியாள ர்கள் ஆகியோர் பின்தொடர்ந்து வாசித்துஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் இணை ஆணையர் மாதவன், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்)ஜெயலட்சுமி உட்பட துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு வீட்டு வசதி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி

## ஈரோடு திண்டல் வேலாயுதசுவாமி அமிர்தகடேஸ்வரர் ஆலய மஹாகும்பாபிஷேக திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழாவை முன்னிட்டு பெருஞ்சாந்தி பெருவிழா பணிகளை பார்வையிட்டு ஆய்வு





தமிழ்நாடு வீட்டு வசதி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (09.02.2026) ஈரோடு, திண்டல், அருள்மிகு ஸ்ரீ வேலாயுதசுவாமி புனராவர்த்தன ஸ்ரீ அபிராமி அம்பிகை உடனுறை அமிர்தகடேஸ்வரர் நூதன ஆலய அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேக திருக்குட முழுக்கு நன்னீராட்டு பெருஞ்சாந்தி பெருவிழா வருகின்ற 22.02.2026 அன்று நடைபெறுவதை முன்னிட்டு நடைபெற்று வரும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு வீட்டு வசதி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வுமேற்கொண்டு முன்னேற்பாடு பணிகள் குறித்து தெரிவித்ததாவது, மாநகராட்சி சார்பில், கோவில் வளாகத்தை சுத்தமாகவும், கழிப்பறை வசதி, குடிநீர் வசதி, உடனுக்குடன் குப்பைகளை அகற்றிட வேண்டுமெனவும், தொடர்ந்து, மின்சார துறையின் சார்பில் கும்பாபிஷேகம் நடைபெறும் தினத்தன்று தடையில்லா மின்சாரம் வழங்கிடவும், நெடுஞ்சாலைதுறையின் சார்பில் ஆக்கிரமிப்புகளை அகற்றி, பக்தர்கள் எளிதாக வந்து செல்லும் வகையில் சாலைகளை மேம்படுத்திட வேண்டும். காவல்துறை சார்பில் பக்தர்கள் பாதுகாப்பாக வந்து செல்லும் வகையில், காவலர்களை கொண்டு கூட்ட நெரிசல் ஏற்படாதவாறு சி.சி.டி.வி. கேமராக்கள் மூலம் கண்காணிக்க வேண்டும். மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் மருந்துவர்களுடன் மருத்துவ குழு. தீயணைப்புத்துறை யின் சார்பில் தீயணைப்பு வாகனங்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும். மேலும், இவ்விழாவினை எவ்வித இடர் பாடு இல்லாமல் விழாவினை சிறப்பாக நடத்திட அனைத்துஅலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும் என தெரிவித்தார். இந்த நிகழ்ச்சிகளின் போது, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, இணை ஆணையர் (இந்து சமய அறநிலையத்துறை) பரஞ்ஜோதி, உதவி ஆணையர் சுகுமார், திண்டல் முருகன் கோவில் செயல் அலுவலர் ஜீவலட்சுமி, கோவில் நிர்வாகிகள், உறுப்பினர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.



நிதி சார்ந்த கல்வி மற்றும் விழிப்புணர்வு வாரம் 2026, பிப்ரவரி 09 முதல் 13 வரை கடைப்பிடிக்கப்படுவதையொட்டி நேற்று (9.2.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி கல்வி மற்றும் விழிப்புணர்வு பதாகைகளை வெளியிட்டு துவக்கி வைத்தார்கள். உடன் கோபிசெட்டிபாளையம் சார் ஆட்சியர் சிவானந்தம் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் நேற்று (09.02.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு விலையில்லா சலவைப்பெட்டிகளை வழங்கினார்.

## சட்டப்போராட்டத்தில் இருந்து பின்வாங்கியது 'ஜனநாயகன்' வழக்கை வாபஸ் பெற தயாரிப்பு நிறுவனம் மனு



ஜனநாயகன் படத்துக்கு தணிக்கை சான்று கோரிய வழக்கை தயாரிப்பு நிறுவனம் திரும்பப் பெற்றது. ஜனநாயகன் திரைப்படம் மறு தணிக்கைக்கு அனுப்பப்பட்ட நிலையில் தயாரிப்பு நிற்வனம் வழக்கைவாபஸ்பெற்றது. விஜய் நடித்துள்ள ஜனநாயகன் திரைப்படம் தணிக்கை குழு மறுதணிக்கைக்கு அனுப்பப்பட்டது. ஜனநாயகன் படத்துக்கு யு/ஏசான்றிதழ்வழங்க உயர்நீதிமன்ற தனி நீதிபதி உத்தரவிட்டிருந்தார். தனி நீதிபதியின் உத்தரவை எதிர்த்து தலைமை நீதிபதி அமர்வில் தணிக்கை வாரியம் மேல்முறையீடு செய்தது. ஜனநாயகன் படத்துக்கு தணிக்கை சான்று வழங்க தனிநீதிபதி உத்தரவுக்கு உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது.

சென்னை ஐகோர்ட் வழங்கிய இடைக்கால தடையை எதிர்த்து தயாரிப்பு நிறுவனம் உச்சநீதிமன்றம் சென்றது. ஜனநாயகன் பட சான்று விவகாரத்தை சென்னை ஐகோர்ட் விசாரிக்கலாம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. இந்நிலையில் விஜய் நடித்துள்ள ஜனநாயகன் திரைப்படம் தொடர்பான வழக்கை திரும்பப் பெறுவதாக படக்குழு சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் கடிதம் அளிக்கப்பட்டுள்ளது. ஜனநாயகன் திரைப்படத்தை மறுதணிக்கைக்கு அனுப்ப படக்குழு முடிவு செய்துள்ளதால், வழக்கை திரும்பப் பெறுவதாக அறிவித்துள்ளது.

வழக்கை திரும்பப் பெறுவதற்கான கடிதத்தை படக்குழு சார்பில் வழக்குரைஞர் விஜயன் சுப்பிரமணியம் நீதிமன்றத்தில் வழங்கினார்.

சென்சார் போர்டு மறு ஆய்வு குழுவை அணுகி உள்ளதால், மறு ஆய்வுக்குழு 20 நாட்களில் படத்தை பார்த்து ஆலோசித்து திருத்தங்களை சொன்னபின் தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்பட வாய்ப்புள்ளது.

## அரசு கலைக்கல்லூரியில் தற்காலிக பேராசிரியர்கள் பணிபுறக்கணிப்பு போராட்டம் துவக்கம்



குமாரபாளையம் அரசு கலைக்கல்லூரியில் தற்காலிக பேராசிரியர்கள் காலவரையற்ற பணி நிரந்தரம் கோரி பணி புறக்கணிப்பு போராட்டம் துவக்கினர். இது பற்றி அவர்கள் கூறியதாவது : குமாரபாளையம் அரசு கலை அறிவியல் கல்லூரியில் ஆண்கள் 15, பெண்கள் 16,எனமொத்தம் 31 பேராசிரியர்கள் தற்காலிக ஆசிரியர்களாக பணியாற்றி வருகிறார்கள். தி.மு.க. அரசு தேர்தல் வாக்குறுதியில் எங்களுக்கு பணி நிரந்தரம் என்று கூறி ஏமாற்றி விட்டார்கள். ஒரே கல்வித்தகுதி உள்ள எங்களுக்கு மாதம் 25 ஆயிரம் மட்டும் தான் சம்பளம். ஆனால் நிரந்தர ஆசிரியர்களுக்கு ஒரு லட்சம் மேல் வாங்கி வருகிறார்கள். எங்களுக்கு எந்த அரசு சலுகைகிடையாது. பிரசவவிடுப்பு உள்ளிட்ட எதுவும் கிடையாது. இதுபோல் மாநிலம் முழுதும் 8 ஆயிரத்து 500 பேர் உள்ளனர். அனைத்து அரசு கல்லூரிகள் எங்களால்தான் செயல்பட்டு வருகிறது. எங்கள் மாநில தலைவர் செந்தில்குமார் வழிகாட்டுதல்படி இன்று முதல் காலவரையற்ற பணி புறக்கணிப்பினை துவக்கி உள்ளோம். இவ்வாறு கூறினார்கள். முன்னதாக கல்லூரி வாசலில்நின்றுகோரிக்கைகள் வலியுறுத்து கோஷங்கள் எழுப்பினர்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.